யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | கர்நாடக சங்கீதம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01)

i) சங்கிரக சூடாமணி என்னும் நூலை இயற்றியவர் யார்? (01 புள்ளி)

ii) 12 சக்கரங்களின் பெயர்களையும் ஒழுங்காகத் தருக. (03 புள்ளி)

iii) 72 மேளகர்த்தா அமைப்பு முறையில் ரிஷபம், காந்தாரம், தைவதம், நிஷாதம் வேறுபடும் முறையை விளக்கி 8 வது சக்கரத்தின் மேள எண், இராகம், ஸ்வரதானம் என்பவற்றை எழுதுக. (16 புள்ளி)

02)

i) கர்நாடக இசைக்கச்சேரியில் பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் கருவி யாது? (01 புள்ளி)

ii) இவ்வாத்தியத்தின் தந்திகள் சுருதி கூட்டப்படும் முறையை எழுதுக. (02 புள்ளி)

iii) இவ்வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்கள் இருவரைக் குறிப்பிடுக. (02 புள்ளி)

iv) இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக. (07 புள்ளி)

v) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக. (08 புள்ளி)

03)

i) கிருதியை அலங்கரிக்கும் அணிகள் யாவை? (04 புள்ளி)

ii) அவற்றுள் இரண்டினை விளக்கி உதாரணம் தருக. (06 புள்ளி)

iii) தசவித கமகங்களையும் வரிசைக்கிரமமாக எழுதுக. (04 புள்ளி)

iv) அவற்றுள் மூன்றினை விளக்குக. (06 புள்ளி)

## பகுதி II

04) பின்வரும் இராகங்களுள் இரண்டைத் தெரிவு செய்து அவற்றின் இலட்சனங்களை விரிவாக எழுதுக. (20 புள்ளி)

(உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)

i) ஆபோகி (ii) பண் கௌசிகத்திற்கு இணையான கர்நாடக இராகம்

iii) கர்நாடக பெஹாக் (iv) சாவேரி

05)

i) “பங்கஜநாப” என்ற முத்திரையையுடைய வாக்கேயகாரர் யார்? (02 புள்ளி)

ii) இவரது வாழ்க்கை வரலாற்றையும், இசைத்தொண்டினையும் எழுதுக. (18 புள்ளி)

06) சிறுகுறிப்பு எழுதுக. (20 புள்ளி)

i) வாதிஸ்வரம் (ii) களை (iii) கிரஹம் (iv) திவிதீய கனபஞ்சமம்

07) பின்வரும் உருப்படிகளுள் இரண்டினை தெரிவு செய்து விளக்குக. (20 புள்ளி)

i) தரு (ii) தேவாரம் (iii) பதம் (iv) சூளாதி

08) ஹிந்துஸ்தானி இசைத் தாளங்கள் நான்கினையும் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் டேக்கா மூலம் விளக்கி உதாரணம் எழுதுக. (20 புள்ளி)